இணையதள அறிவிக்கை

ந.க.அ1/3265/2019 நாள்: 04.03.2020

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு**
**திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம்**
**சிவகங்கை மாவட்டம்**

அலுவலக உதவியாளர் பணியிடத்துக்கான நேரடி நியமன அறிவிக்கை (Notification)

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ஒன்றியப் பொதுநிதியின் கீழ் ஊதியம் வழங்கப்படும் பணியிடங்களில் காலியாக உள்ள 1 (ஒன்று) அலுவலக உதவியாளர் பணியிடத்தை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட கீழக்கண்ட விபரப்படி இனசுழற்சி மற்றும் இட ஒதுக்கீடு, தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**அலுவலக உதவியாளர்- 1 காலிப்பணியிடம்**

| வ. எண் | பதவியின் பெயர் | காலிப் பணியிட எண்ணிக்கை | இன சுழற்சி (Rotation) | இட ஒதுக்கீடு (Turn) |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 1 | ஆதிதிராவிடர் முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர் (Schedule Caste Arunthathiyars on preferential Basis) | பெண் (ஆதரவற்ற விதவை) (Women – Destitue Widow) |
| கல்வித் தகுதி - அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>சிறப்பு தகுதி - மிதிவண்டி ஓட்டத் தெரிந்தவராக இருக்க வேண்டும் | | | | |

| இனம் | வயது |
|---|---|
| ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.01.2020 அன்று 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |

- அலுவலக உதவியாளர் பணிக்கு ஊதிய கட்டு ரூ.15700 - 50000 (நிலை-1) ஊதியம் நிர்ணயம் மற்றும் இதர படிகள்
- **விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**
  ஆணையாளர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),

  ஊராட்சி ஒன்றியம்,
  திருப்புவனம் - 630 611 சிவகங்கை மாவட்டம்

**நிபந்தனைகள்:**

1. சிவகங்கை மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித்தகுதி, இருப்பிடம் (ரேசன்கார்டு மற்றும் ஆதார் கார்டு) சாதிச்சான்று முன்னுரிமை சான்று, இதர சான்றிதழ் நகலினை சான்றொப்பம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
3. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என பரிசீலனையில் கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.
5. நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்வதற்கு பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது
6. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் ( Call Letter) அனுப்பி வைக்கப்படும்.
7. விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 19.03.2020 தேதியன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. நியமனத்தை இரத்து செய்வதற்கான அனைத்து அதிகாரமும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு உண்டு.

அலுவலக உதவியாளர் விபரங்கள் மற்றும் விண்ணப்படிவம் சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அலுவலகத்திலும், தேசிய தொழில்நெறி வழிகாட்டு மைய இணையதளம் (National Service Portal) www.ncs.gov.in மற்றும் சிவகங்கை மாவட்ட இணையதளம் www.sivaganga.nic.in ஆகிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம், திருப்புவனம்